# தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்களை தெரிவு செய்தல் - 2024
# (இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I)

**புள்ளி ஒழுங்கு நடைமுறை**

**1. சேவை மூப்பு** **உச்சபட்ச புள்ளி 30**

(இலங்கை க .நி. சேவையின் தரம் 1 க்கு பதவி உயர்வு பெற்ற நாளிலிருந்து வருடத்திற்கு வழங்கப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 யின்படி தரம் 1 இல் மிகவும் முனைப்பாக மற்றும் திருப்திகரமான சேவையைக் கொண்ட அலுவலர்களுக்கான சேவை மூப்புக்காக ஒதுக்கப்பட்ட மொத்த புள்ளி விகிதாசாரப்படி, மற்ற அலுவலர்களுக்கு தரம் 1 இல் முனைப்பாக மற்றும் திருப்திகரமான சேவைக்கான புள்ளிகள் வழங்கப்படும். மேலும், ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது வேதனம் இல்லாமல் விடுப்பு காரணமாக திருப்திகரமான சேவையை இழந்த அலுவலர்களுக்கு மட்டும் அந்தக் காலத்திற்கான புள்ளிகள் வழங்கப்படாது.)

**குறிப்பு:** இ.க.நி. சேவை தரம் 11 யில் இரண்டு (02) ஆண்டுகள் முனைப்பாக மற்றும் திருப்திகரமான சேவையுடன் 11 மற்றும் 111 தரங்களில் 12 ஆண்டுகளுக்கும் மேலாக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்த பின்னர் தரம் 1 க்கு பதவி உயர்வு பெற்ற அலுவலர்களின் அந்த மொத்த சேவைக்காலம் 12 ஆண்டுகளுக்கு மற்றும் தரம் 11 இல் இரண்டு ஆண்டுகளுக்கு கூடுதலான முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் தரம் 1 சேவையாகக் கருதப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.

**2. பாடசாலை முகாமைத்துவம் குறித்த சேவை அனுபவம்** **உச்சபட்ச புள்ளி 20**

**2.1 அதிபராக**

நியமனக் கடிதம், சேவையின் பிரமாணக்குறிப்பு விதிகளின்படி, நியமன அதிகாரியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதித்துவ அதிகாரியால் (அமைச்சுச் செயலாளர்/மாகாண பிரதம செயலாளர;/ மாகாணக் கல்விச் செயலாளர்) மூலம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| a. | 1AB பாடசாலையின் நிரந்தர அதிபராக ஒரு முழுமையான வருடத்திற்கு | 03 |
| b. | 1C பாடசாலையின் நிரந்தர அதிபராக ஒரு முழுமையான வருடத்திற்கு | 02 |

**2.2 பிரதி அதிபராக**

| | | |
|---|---|---|
| a. | 1AB பாடசாலையின் பிரதி அதிபராக ஒரு முழுமையான வருடத்திற்கு | 02 |
| b. | 1C பாடசாலையின் பிரதி அதிபராக ஒரு முழுமையான வருடத்திற்கு | 01 |

**2.3 கல்வி அமைச்சின் அல்லது மாகாண அல்லது வலயக் கல்வி அலுவலகத்தில் புாடசாலை மேற்பார்வை மேற்கொள்ளும் அதிகாரியாக அனுபவம்**

| | | |
|---|---|---|
| a. | பணிப்பாளராக ஒரு முழுமையான வருட சேவை அனுபவத்திற்கு | 02 |
| b. | உதவி/பிரதி பணிப்பாளராக ஒரு முழுமையான வருட சேவை அனுபவத்திற்கு | 01 |

**குறிப்பு 01** : வருடத்திற்கு மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 12 மாத சேவை காலத்திற்கு மட்டுமே வழங்கப்படும் என்பதோடு அதற்கும் குறைவான காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. மேலும், அரசாங்க சேவை ஆணைக்குழு இலக்கம் 2310/29 மற்றும் 14.12.2022 திகதியிட்ட விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் 141 இன் படி நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு 02** : மேலே உள்ள 2.1, 2.2 தொடர்பாக, உரிய நியமனம் / இடமாறுதல் கடிதம் வழங்கும் போது, பாடசாலை வகைப்பாட்டுக்கமைய 1AB, 1C பாடசாலையாக இருந்ததாக மற்றும் அந்த கடிதம் கையொப்பமிடப்பட்டது நியமனத்துக்குரிய / அதிகாரம் பகிரப்பட்ட பிரதிநிதிகளால் என்பதை எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்த வேண்டும். மேலும் 2.3 இன் கீழ், கல்வி அமைச்சு அல்லது மாகாண அல்லது வலய கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் பாடசாலை மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்/ ஈடுபட்டவர் என்பதை பிரிவுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் / மாகாண கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர், எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்த வேண்டும்.

**3. மேலதிக கல்வித் தகைமைகள்** **உச்சபட்ச புள்ளி 15**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து அல்லது தேசிய கல்வி நிறுவனத்தால் பெறப்பட்ட தகைமைளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

(ஆட்சேர்ப்பின் போது அல்லது வினைத்திறன் தடை தாண்டலுக்காக அல்லது பதவி உயர்வுகளுக்காக அல்லது அடிப்படை தகைமைமையாக தொடர்புடைய கல்வித் தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது)

3.1 பட்டப்பின் பட்டம் அல்லது அதற்கு உயர்வான தகைமை -15 புள்ளி
3.2 பட்டப்பின் டிப்ளோமா -12 புள்ளி
3.3 அடிப்படை பட்டம் -09 புள்ளி
3.4 பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா -06 புள்ளி
3.5 தொழிலுக்குரிய நேரடியான தொடரபுடைய மற்ற டிப்ளோமாக்கள் -03 புள்ளி
(பாடநெறியின் காலம் குறைந்தது 9 மாதங்களுக்கு மேலானதாக இருத்தல டிப்ளோமா வழங்கும் நிறுவனம் அரசில் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்)

**4. ஆங்கில மொழித் தேர்ச்சி** **உச்சபட்ச புள்ளி 05**

**(தொடர்பாடல் திறன் பரிசீலிக்கப்படும்)**

**5. கணினி கல்வி தொடர்பான அறிவு** **உச்சபட்ச புள்ளி 05**

**(செயன்முறை பயன்பாடு பரிசீலிக்கப்படும்)**

**6. சேவை மதிப்பீடுகள்** **உச்சபட்ச புள்ளி 03**

பொது 230B புகழுரை மற்றும் கண்டனங்கள் படிவத்தின்படி கல்விச் செயலாளர் அல்லது துறைத் தலைவரால் முறையாக வழங்கப்பட்ட சேவை மதிப்பீடுகளுக்கு தலா 1 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 சேவை மதிப்பீடுகளுக்கு

குறிப்பு:

(திணைக்களத் தலைவர் என்றால் மாகாண பிரதம செயலாளர், மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அல்லது கல்வி வெளியீடுகள் ஆணையாளர் நாயகம்.)

**7. முன்வைப்பு** **உச்சபட்ச புள்ளி 12**

கல்வித் துறையில் புதிய போக்குகள், தற்போதைய கல்விக் கொள்கைகள் மற்றும் 21 ஆம் நூற்றாண்டில் கல்வித் துறையில் உள்ள சவால்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி தேசியப் பாடசாலை அதிபராக எதிர்காலத்தில் எப்படிப் பணிபுரியலாம் என்ற விதம் குறித்து தமது நடைமுறை அனுபவத்துடன் கூடியதாக 05 நிமிட வாய்மொழி விளக்கத்தை அளிக்க வேண்டும். என்பதோடு அந்த முன்வைப்புக்குரிய வன்பிரதி நேர்காணல் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு, பின்வரும் விடயங்களின் கீழ் புள்ளிகள் வழங்கக்கப்படும்.

7.1 பிரவேசம் மற்றும் அறிமுகம் - 02 புள்ளி
7.2 உள்ளடக்கம்- (பாடசாலை இனங்காணல், நோக்கங்கள், முன்மொழிவுகள்) - 05 புள்ளி
7.3 முன்வைப்புத் திறன் - 03 புள்ளி
7.4 நேர முகாமைத்துவம் - 02 புள்ளி

**8. சம்பவக் கற்கை** **உச்சபட்ச புள்ளி 05**

(நேர்காணல் குழுவால் முன் வைக்கப்படும் வாய்வழி சம்பவத்தின் அடிப்படையில் கேள்விகள் கேட்கப்படுவதோடு, சூழ்நிலையை பகுப்பாய்வு செய்வதிலும் சிக்கலைத் தீர்ப்பதிலும் கவனம் செலுத்தப்படும்.)

**9. நேர்காணலில் காட்டப்படும் ஒட்டுமொத்த திறன்கள் மற்றும் ஆளுமை** **உச்சபட்ச புள்ளி 05**

**மொத்த புள்ளிகள்** ***100***